# மரியாயின் சேனை



கத்தோலிக்க திருஅவையின்
மட்டில் பிரமாணிக்கமுள்ள
உங்களை மரியாயின் சேனையில்
சேர அழைக்கிறோம்.

மரியாயின் சேனை

கத்தோலிக்க திருஅவையைப் பற்றி மேலும் கூடுதலாக தெரிந்துகொள்ள விரும்புகிறீகளா? உங்கள் செப வாழ்க்கையை வளப்படுத்த விரும்புகிறீர்களா? நீங்கள் நெருங்கிய கத்தோலிக்க நட்பை வளர்க்க விரும்புகிறீர்களா? நீங்கள் இயேசுவுடனும் அவரது தாயுடனும் நெருக்கமாக வளர விரும்புகிறீர்களா? மரியாயின் சேனை உங்களுக்கு உதவ தயாராக உள்ளது.

கத்தோலிக்க திருஅவையின்மட்டில் பிரமாணிக்கமுள்ள கத்தோலிக்கரான உங்களை மரியாயின் சேனையில் சேர அழைக்கிறோம்

நீங்கள் திருஅவையில் உங்கள் சமயக் கடமைகளைப் பிரமாணிக்கத்துடன் நிறைவேற்றும் ஒரு நல்ல, பிரமாணிக்கமுள்ள கத்தோலிக்கராக இருந்தால்; நீங்கள் கடவுளிடம் நெருங்கி வர விரும்பினால்: உங்கள் பங்குதள திருஅவைக்கு, இன்னும் அதிகம் உழைக்கவும், உங்கள் ஞான மேய்ப்பர்களுக்கு உங்களால் இயன்ற உதவி செய்யவும் விரும்பினால், மரியாயின் சேனையில் சேர உங்களை அழைக்கிறோம்.

பல பங்குதளங்களில் இப்போது குறைவான பணியாளர்களே உள்ளனர். பங்குதந்தையர்கள்; திருப்பலி நிறை வேற்றுதல், பங்கு மக்களின் ஆன்மீக தேவைகள் திருஅவை நிர்வாகம் போன்ற பணிகள் காரணமாக அதிக வேலை பளுவில் மூழ்கியுள்ளனர். இந்த நிலையில்; நீங்கள் மரியாயின் சேனையில் சேருவதன் மூலம். திருஅவைக்கும், உங்கள் ஞான மேய்ப்பர்களுக்கும் உதவ முடியும். பங்கு குருவானவர் விரும்பியும் சந்திக்க இயலாத வீடுகளில் உள்ள தனிமைப்படுத்தப்பட்டவர்கள், வீடுகளிலும், மருத்துவமனைகளிலும் உள்ள, திவ்விய நற்கருணை, நோயில் பூச்தல் போன்ற அருட்சாதனங்கள் பெற விரும்பும் முதியவர்களையும் நோயாளிகளையும் சேனை உறுப்பினர்கள் சந்தித்து மேற்படி திருவருட் சாதனங்களை பெற உதவுகிறார்கள். மறைகல்வி கற்பித்தல், பங்கு மக்கள் தொகை கணக்கெடுத்தல் போன்ற பணிகளில் பங்குக் குருவுக்கு உதவுகிறார்கள். பொது இடங்களில் கத்தோலிக்க தகவல்களை பரப்ப உதவுகிறார்கள் பொதுவாக, கிறிஸ்துவின் பணியையும். பங்கு திருஅவையின் பணியையும் பங்கு தந்தையின் கண்காணிப்பில் செய்கின்றனர்.

மரியாயின் சேனை என்பது என்ன?

மரியாயின் சேனை என்பது கத்தோலிக்க திருஅவையில் உள்ள பொதுநிலையினரின் மிகப் பெரிய திருத்தூது அமைப்பாரும். இது 1921ஆம் ஆண்டு அயர்லாந்தில் ஆரம்பிக்கப்பட்டு, செயல் பட்டு வருகிறது. ஏறக்குறைய உலகின் எல்லா நாடுகளிலும் ஊழிய உறுப்பினர்களைக் கொண்டு உள்ளது. 6 திருத்தந்தையர்களாலும் 2வது வத்திக்கான சங்கத்தாலும் அங்கீகரிக்கப்பட்டது. தன் உறுப்பினர் களை புனிதப்படுத்துவதன் வாயிலாக கடவுளை மாட்சி படுத்துவதே. மரியாயின் சேனையின் முக்கிய நோக்கம்,

மரியாயின் சேனை என்ன செய்யும்?

செபம் மற்றும் சேவையின் மூலம் உறுப் பினர்கள், தூய ஆவியாரின் கருவிகளாக மாறுகிறார்கள். வீடு வீடாகச் சென்று மக்களை சந்தித்தல் சிறைச் சாலைகளில் உள்ள சிறைக்கைதிகளைச் சந்தித்தல், வீடுகளிலும் மருத்துவ மனைகளிலும் நோயாளிகளைச் சந்தித்தல் இல்லங்களில் தனிமையில் உள்ள வயதான வர்களைச் சந்தித்தல், மறைக் கல்வி போதித்தல், திருமுழுக்கு, உறுதி பூசுதலுக்கு தயாரித்தல், திருப்பயண மாதா சுரூபத்துடன் வீடுகளை சந்தித்து செபித்தல், குடும்ப செபமாலையை ஊக்கப் படுத்துதல், பங்கு சமூகத்தின் பிற ஆன்மீகத் தேவை களைப் பூர்த்தி செய்தல் ஆகிய பணிகளை பங்கு குரு வானவரின் அனுமதியுடனும் அவரது கண்காணிப்பிலும் செய்வார்கள்.

மறை மாவட்ட ஆயரால் நியமிக்கப்பட்ட ஆன்ம இயக்குனரின் வழிகாட்டுதலின் கீழ் சேனையாளர்கள் உள்ளனர். சேனை; ஆன்ம இயக்குனரின் இதயமும் அவரது கைகளின் விரிவாக்கமுமாக உள்ளது.

மரியாயின் சேனை எப்படி வேலை செய்கிறது?

உறுப்பினர்கள் வாரந்தோறும் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் ஒன்று கூடி கூட்டம் நடத்து கிறார்கள். கூட்டம்; ஜெபமாலையுடன் தொடங்குகிறது. பின்னர் சேனை கையேடு, திருவிவிலியம் அல்லது பிற கத்தோலிக்க இலக்கியங்களிலிருந்து ஒரு ஞான வாசகம் வாசிக்கப்படும், அதன் பிறகு, உறுப்பினர்கள் கடந்த கூட்டத்தில் தங்களுக்கு ஒதுக்கப்பட்டு தாங்கள் செய்த வாராந்திர பணியினை பற்றி அறிக்கையிடுகிறார்கள். அடுத்த வாரத்திற்கான புதிய வேலையைப் பெறு கிறார்கள். தங்கள் ஆன்ம இயக்குனரின் வழிகாட்டுதலின் கீழ் ஒவ்வொரு வாரமும் குறைந்தது இரண்டு மணிநேரம் திட்டமிட்ட வேலையை இருவர் இருவராக செய் கிறார்கள். உறுப்பினர்கள் இரண்டு இரண்டு பேராக ஜோடிகளாக வேலை செய்வதால் புதியவர்களுக்கு இது.